உ

சிவமயம்



மல்லை மாநகர்

## திரு. தம்பர் சேனாதிராஜா அவர்கள்

( ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர் )

சிவபதம் அடைந்தமை குறித்த

# நினைவலைகள்

03-03-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr. & Mrs. Thiruchittampalam

உ

சிவமயம்

அளவையம்பதியைப் பிறப்பிடமாகவும்

மல்லை மாநகரை வதிவிடமாகவும்

கொண்ட

**தம்பர் சேனாதிராஜா அவர்கள்**

( ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர் )

சிவபதம் அடைந்தமை குறித்த

# நினைவலைகள்

★


**03-03-1995**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தம்பர் சேனாதிராஜா அவர்கள்



மலர்வு :
12-08-1904

மறைவு :
01-02-1995

*சொல்லார் பவவருடத் தோமில்தைப் பூர்வபக்கத்*
*தெல்லார் துதியை இயல்திதிக்கே — மல்லாகச்*
**சேனாதி ராஜன்** *சிவபெருமான் சேவடி சேர்ந்*
*தானாப்பே ரின்புற்றனன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப் பாடல்கள்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணி பதம் நாடு.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

உ

# திருவாசகம்

## திருப்பெருந்துறையில் அருளிய

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகச் சிறப்பு

**வெண்பா**

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகலுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்
திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்
போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்
குங்கும தோயம்என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி
என்றன் விழுத்துணையே.

அறிந்தேன் எவரும் அறியா
மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்
கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன்நின் னன்பர் பெருமைஎண்
ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற
வாய மனிதரையே.

சென்னிய துன்பொற் திருவடித்
தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்திரு மந்திரம்
சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன்
கூடி முறைமுறையே
பன்னியது என்றும்உன் தன்பர
மாகம பத்ததியே.

நின்றும் இருந்தும் கிடந்தும்
நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த்
தாள்எழு தாமறையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் அரும்பொருளே அரு
ளேஉமை யேஇமயத்து
அன்றும் பிறந்தவ ளேஅழி
யாமுத்தி ஆனந்தமே.

பூத்தவ ளேபுவ னம்பதி
னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளேபின் கரந்தவ
ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா
முகுந்தற்கு இளையவளே
மாத்தவ ளேஉன்னை யன்றிமற்
றோர்தெய்வம் வந்திப்பதே.

கொடியே இளவஞ்சிக் கொம்பே
எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள
மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய
தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்துஇங்கு இனிப்பிற
வாமல்வந்து ஆண்டுகொள்ளே.

சொல்லும் பொருளும் எனநட
மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க்
கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ
லோகமும் சித்திக்குமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பித் தொழும்அடி யார்விழி
நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த
மாகி அறிவிழந்து
சுரும்பில் களித்து மொழிதடு
மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தராவர் என் றால்அபி
ராமி சமயம் நன்றே.

கோமள வல்லியை அல்லிஅம்
தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதமி
லாளை எழுதரிய
சாமள மேனிச் சகல
கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு
பாருக்கும் ஆதிபரே.

ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டம்எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்
குசமும் கருப்புவில்லும்
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு
வார்க்குஒரு தீங்கில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றாய் வளர்ந்து மிக நன்றான உறவினன்

பண்பின் இலக்கணமாய் கண்ணியத்தின் இலக்கியமாய் வாழ்வதே மானிடசால்பு என ஆன்றோர் சால்பு பகர்ந்திருக்கின்றனர். வேதமொழிபோல உள்ள இந்தப் போத உரையை நாம் எல்லோரும் பல்வேறு கோணங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உற்றுநோக்கி இருக்கின்றோம்.

இந்த அடிப்படையிலே பழையவர் ஒருவருக்குச் சிந்தையில் எழுகின்றவர் இன்னுமொரு கிழமை பெயர்ந்தவரே. சுற்றிச்சொல்லப்படுமிக்கூற்று யாரைப் பற்றி என்றால் என்னுடன்கற்ற உற்ற உறவினன், ஆப்த நண்பன், எவர்மனதையும் கவர்ந்து பற்றிக்கொள்ளும் கனிமையும் இனிமையும் அமைந்த அளவை மல்லை நகர் இரண்டும் அளவளாவிய பேரூரிலே பிறந்து வளர்ந்து யாரூரிலும் சிறந்து விளங்கியவர் இப்பொழுது இறைவனடியில் அமர்ந்திருக்கின்ற **தம்பர் சேனாதிராஜா** அவர்கள்.

இடம்பொலிந்த சேனாதிராசருக்கு உடன்பிறந்தவர்கள் எல்லோரும் உயர்ந்தோர். முத்தோன் ஒருவரைத் தொடர்ந்தவர்கள் மூவரும், நங்கையர் இருவரும் ஆவர். இந்த இல்லங்கள் யாவற்றையும் செல்லம்பொழிய வைக்கின்றவர்கள் வந்து அணைந்தோர் ஆவர்.

அன்னார் தோன்றிய வளாகம் கர்ணாமிர்த கானத்திற்குப் புகழ்படைத்ததாயிருந்த வகையிலே, இயல்பாகவே சேனாதிராசரும் சங்கீதமயமாய் தனது வாழ்க்கையை இங்கிதமாய் நடத்தி வந்தனர் என்போம். மங்கல மனைமாட்சி, சங்கம்போன்ற அறிவறிந்த மக்கட்பேறு ஒருங்கு அமைந்த வகையிலே சேனாதிராயர் இல்லத்திலே விருந்தினராக விரும்புவோர் நிரல் நெடுங்கொடியாகும். இல்லத்தரசியும் சொல்லத்தகு வல்லமைபடைத்த மாது சிரோன்மணியாகச் சேனாதி இல்லம் தானாகத்துலங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகம் புருட இலக்கணம் என்னும் உத்திக்கு அமைய அரசசேவையிற் பரவிப்பரிசுபோல அரிய கரும புருடராகக் கணிக்கப்பட்டார். எழுதுவினைஞராக எழுந்த இளஞர் விழுதுவிட்டு விரிந்து ஆங்கு அதிகார ஆற்றல் வளர்ந்து ஈற்றில் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் நிலையிலிருந்து ஓய்வு பெற்றனர்.

எப்படியும் எம் உள்ளத்தில் ஏற்றமாகஎழுந்து வருகின்ற எண்ணத்தில் அன்றுதொட்டு இன்றும் என்றும் இராமநாத இலட்சியத்திற்கு உரியவராக விளங்குகின்றவர், கலைமாணி திருமதி சுபத்திராதேவிவிவேகானந்தன் ஆவர். இக்கல்லூரியிலே எக்காலமும் எந்நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளும் களிப்பு உடையவன் யான். முதன் முதலாக இந்தவளாகத்தில் 1918ஆம் ஆண்டு காலடி எடுத்துவைத்த யான் இன்னமும் நடமாடிக்கொண்டே இருக்கும்படி இறையருள் நிறைய உண்டு.

ஏக புத்திரனாகச் சேனாதிராயருக்கு வாய்த்தவர் நாகேந்திரன் அவர்கள். சைவச்சால்பு கைவந்தவர் இவர் என்று யாவரும் கூறக்கூடிய ஒழுக்க ஆறு இவரது சின்னம் எனலாம். தந்தைக்கு உகந்த மைந்தன் என்போம்.

ஏகமாய் உள்ள ஆண் மகப்பேறு பெருமை பெற அநேகமாய் விரிந்தனர் பெண் மகார். ஆறு திருவதனங்கள் போலக் கூறும் பெருமைக்குரியவர்கள். அத்தகைய செம்மை வாய்ந்த உத்தமர்களை வாழ்க்கைத் துணையாகப் பெற்றனர் என்றால், சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல அமைந்தது சேனாதி இல்லம்.

எனது சுற்றத்தில் அமைந்த வரும், எனது உற்ற நண்பனுமாகிய திருவாளர் சேனாதிராயரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பழம் பதி விநாயகர் அருள் புரிவாராக.

**நம. சிவப்பிரகாசம்**
பிரசித்த நொத்தாரிசும்
சட்டத்தரணியும்
J. P. U. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவான மனிதர்

# அமரர் சேனாதிராசா அவர்கள்

வயதிலே முப்பு; வாழ்விலே ஏற்றம், குடும்பத்தில் பொலிவு; கொள்கையில் உயர்வு; பண்பிலே சிகரம்; கல்வியில் பெருமை; கடமையில் கண்ணியம்; இத்தனையும் ஒருங்கமையப் பெற்றவர் தான் அமரர் சேனாதிராசா அவர்கள். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஒப்புயர்வற்ற பண்பினாலும் தன்னலங் கருதாப் பணியினாலும் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணப் பட்டார்.

''எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே''

என்ற ஔவையின் கூற்றுக் கிணங்க இப் பெரியாரின் நாமத்தினால் மல்லாகம் பெருமை பெறுகிறது. சிறந்த மொழி பெயர்ப்புக் கலைக்கு இவர் ஒரு தகுந்த சான்றாளனாக விளங்கி வந்துள்ளார். முத்து முத்தான எழுத்தும் முறையான சிந்தனையும் மேற்படி பதவியை மேற்கொள்ள வைத்தது. இப்பதவியில் இருந்த காலத்தில் பலருடைய பாராட்டையும் இப் பெரியார் பெற்றுக் கொண்டார்.

ஓய்வு பெற்ற பின்பும் ஓய்ந்து விடாது சமய சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். மேலும் ஒழுங்கும் ஒழுக்கமும் செய்வினைத் திறனும் இவரிடத்தில் நன்கு அமைந்தமையால், ஊருக்கு உபகாரியானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் பிறக்கிறான், இறக்கிறான் என்ற பேச்சுக்கு மத்தியிலே வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தான் என்ற நற்பெயர் சூட்டப் படும்போது தான் மனித வாழ்வின் குறிக்கோள் நிறைவடைகிறது.

**தேடிச் சோறு நிதம் தின்று**
**பல சின்னஞ் சிறு கதைகள் பேசி**

நிற்கும் வேடிக்கை மனிதரில் ஒருவராக இடம் பெறுப வரல்லர் அமரர் சேனாதிராசா. ஆயிரம் பிறை கண்ட புண்ணியம் பெற்ற இவரின் ஆத்மா சாந்தி நிலையைத் தானே சென்றடையும் என்பதற்கு ஐயமில்லை.

ஓம்சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஒரு குறிப்பு:

ஆன்மாக்களுக்கு உடலைக் கொடுத்து உலகில் வாழ வைக்கும் இறைவன் அவர்கள் வாழ்வு அர்த்த முள்ளவாழ்வாக அமைய வேண்டி, அன்பு, அறம், பரோபகாரம் ஒப்புரவு முதலிய நெறிகளையும் வகுத்துள்ளான். அம்மட்டினன்றி, அறிவறியா மக்கள் மத்தியில் அவற்றைச் செயன் முறைப் படுத்தி அனைவர்க்கும் முன்மாதிரியாக இருந்து வாழ்வாங்கு வாழ்வது இப்படித்தான் என்று முத்திரை பதித்துச் செல்லும் உத்தமர்களையும் எமக்குத் தந்தருளுகின்றான். அத்தகையோரில் இன்று கண் கண்ட ஒருவர் ஸ்ரீமான் சேனாதிராசா என்பதை அறிய வருகையில் மானுடத்தின் மகிமை யுணர்ந்து பூரிக்கின்றோம்.

இங்கு வந்து வந்து போய்ப்போய்க் கொண்டிருக்கும் உத்தமர்கள் ஒவ்வொருவரும் தத்தம் ஞாபகமாக விட்டுச் செல்பவை அரும் பெரும் ஆக்கங்களான உயர் மனிதப் பண்புகள். அவற்றை இனங் கண்டு அரவணைத்து வருதலில் மாநுடம் மென்மேல் உயர்தற்கு வாய்ப்புண்டு. அது பேணத்தகும்.

பண்டிதர் மு. கந்தையா B. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்தியுரை

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"......

என்று குழந்தைச் செல்வத்தைத் திருவள்ளுவ நாயனார் பாராட்டியுள்ளார். திரு. தம்பர் சேனாதிராசா அவர்கள் சிறந்த இல்வாழ்க்கையின் பயனாக ஒரு ஆணும் ஆறு பெண்களுமாக ஏழு நன்மக்கள் உதித்தார்கள். அவர்கள் அனைவரும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டவர்களாய் விளங்குகின்றார்கள். ஏக புத்திரனாய நாகேந்திரன் அவர்கள் எனது அரிய ஆதரவாளனும் ஆப்த நண்பனுமாவார். ஏழாண்டுகள் மாணவியாகவும் முப்பத்துமூன்று ஆண்டுகள் ஆசிரியையாகவும் இராமநாதவள்ளல் அமைத்த இராமநாதன் கல்லூரியில் பணி புரியும் முத்தமகளான சுபத்திரா அவர்கள் எனது குடும்பச் சிநேகிதரும் ஆலோசகருமாவார். திரு. சேனாதிராசா அவர்கள் எமது சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினராய் இருந்து எமது கிராமத்திற்கு ஆற்றிய பணிகள் பற்பலவாகும். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்றதுடன் நிற்காது கோவில்களில் புராணப்படிப்புக்களிலும் மிகவும் ஈடுபாடுடையவரானார்.

இலிகிதராய் அரச சேவையில் சேர்ந்த இவர் நீதிமன்றின் மொழி பெயர்ப்பாளருமாகி ஈற்றில் நீதிமன்றப் பதிவாளராயிருந்து இளைப்பாறினார்.

கடும் வார்த்தைகள் இவரிடம் கண்ணுக் கெட்டா. இன்சொல்லால் எல்லோரையும் அணைத்து ஊர்மக்களின் பிரச்சினைகளைக் கூடத் தீர்த்து வைத்தார்.

மல்லாகத்தின் வரலாற்றை எமது சங்கம் எழுத ஆரம்பித்த நேரத்தில் தனது 91ஆவது வயதில் இவர் இறைவனடி சேர்ந்தது எமது சங்கத்திற்கு மாத்திரமன்றி எமது கிராமத்திற்கே பேரிழப்பாகும்.

பண்புமிக்க அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பழம் பதியானைவேண்டி நிற்கிறோம்.

ஐ. எஸ். ஸ்ரீபாஸ்கரன்
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் — தலைவர்
18 - 02 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# சேனாதிராசா பற்றிய நினைவலைகள்

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலர்
தோன்றலிற் தோன்றாமை நன்று''

என்ற வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழிக் கேற்ப இப்புவியிலே மிகச்சிலரே தமது பூர்வ புண்ணியத்தின் பலனாக அபூர்வமாகப் பிறப்பது உண்டு. இந்த வகையிலே எமது கிராமத்திலே எம்மிடையே வாழ்ந்து அண்மையிலே அமரத்துவம் அடைந்த திருவாளர். தம்பர் சேனாதிரராஜா அவர்கள் அடங்குவர்.

உண்மையிலே திரு. சேனாதிராஜா அவர்களுடன் பழகியவர்கள் இந்த நிலைப்பாட்டினை ஏற்றுக் கொள்வார்கள். இவரது சீரிய வாழ்க்கையில் இருந்து இளம் சந்ததியினர் கற்றுக்கொள்ள அநேக விஷயங்கள் உள்ளன.

இவர் கசடறக் கற்றவர். தான் பெற்ற கல்விக்கு ஒப்பச்சீரிய வாழ்க்கையைக் கடந்த 91 வருட காலமாக நடத்தியவர். இவர் கோபப்பட்டதை அல்லது கோபமான வார்த்தைகளைப் பேசியதை நாம் அறியோம். சாந்த குணம் படைத்தவர். இளைய சந்ததியினருக்கு புத்தி மதிகளைக் கூறி நல்வழிப்படுத்தியவர். மொத்தத்திலே எமது கிராமத்திலே கடந்த 91 வருடகாலமாக அணையா ஜோதியாக இருந்த ஒரு கலங்கரை விளக்கு அணைந்து விட்டது. இது எமக்கு ஒரு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அந்நாளிலே, தான் தேர்ச்சி பெற்ற ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழித் திறமையினாலே அக்கால நீதி நிர்வாக சேவையிலே மொழிப்பெயர்ப்பாளராகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரும் அரிய வாய்ப்பு இவருக்கும் கிடைத்தது. இந்த வாய்ப்பானது அவருக்கு அக்காலத்திலே பணிபுரிந்த சிறப்பு வாய்ந்த நீதிபதிகளின் தொடர்புகளையும் நம்பிக்கையையும் ஏற்படுத்திக் கொடுத்ததோடு பொது மக்களுடனும் அவர்களது அன்றாடப் பிரச்சினைகளையும் கேட்டறிந்து அவற்றிற்குப் பரிகாரங் காணவும் பெரிதும் உதவியது. இதுவே இவரது வாழ்க்கை பொலிவுறவும் சிறக்கவும் உறுதுணையாக அமைந்தது. இவரது விடாமுயற்சியாலும் கண்ணியமான சேவை மனப்பாங்கினாலும் இவர் வாழ்க்கைப் படியில் சாதுரியமாக முன்னேறினார். இதன் பயனாக இவர் நீதிமன்ற சேவையிலே உயர்பதவியான நீதிமன்றப் பதிவாளர் என்னும் பணியை செவ்வனே ஆற்றி இளைப்பாறினார்.

இளைப்பாறிய பின்னர்கூட இவர் தனது வாழ்க்கையை தனது மனைவி மக்களுடன் மட்டும் செலவிடாது கிராமத்தின் முன்னேற்றத்திற்குப் பல வகையிலும் உறுதுணையாக இருந்து முன் எடுத்துச் சென்றார். இதனால்தான் இறைவன் இவருக்குப் பூரண ஆயுளை வழங்கினான் போலும். இவர் வாழ்ந்து காட்டிய பாதையிலே நாமும் பின்பற்றி உய்வோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"ஜீவபதி"
மல்லாகம்

**மு. சபாநாதன்**
பிரசித்த நொத்தாரிசும்,
சட்டத்தரணியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய
# பெரியார் திரு. தம்பர் சேனாதிராசா

அமரத்துவம் எய்திய சேனாதிராசா அவர்கள் இல்லற வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து காட்டியவர். அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் திருமணப்பேறு காரணமாக மல்லாகத்தை வாழ் விடமாகக்கொண்டார். அளவெட்டி அருணோதயாக் கல் லூரியில் ஆரம்பக் கல்வியைக்கற்ற இவர் திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியில் ( இப்போது யாழ் பல்கலைக் கழக வளாகமாக விளங்கும் இடம் ) உயர்கல்வியைக் கற்றுத் தேறி அரசாங்க சேவையில் இலிகிதராகக் கடமை ஏற்றார். அமைதியான சுபாவமும், சேவைத் திறமையும் கொண்ட இவர் இலிகிதர் சேவையில் இருந்து விரைவில் நீதிமன்ற முதலியாரானார். பின்னர் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று நீதிமன்றப் பதிவாளரானார். தன்னுடன் கூட வேலைசெய்பவர்க ளோடும், குடும்பத்தார், அயலவர், நண்பர்களோடும், அன்பாகவும், பண்பாகவும் பழகும் சுபாவம் உள்ளவராக இருந்தார். ' அடக்கம் ஆயிரம் பொன் பெறும் ' என்பதற்கு இணங்க இவரின் குண இயல்புகளை ஊரவர்கள் வியந்து போற்றினர். தமிழிலும் தேர்ச்சி உள்ளவராக இருந்தார். இவரது கையெழுத்து ஆரம்பகாலம் தொட்டு இறுதிவரை உறுப்பான அழகிய எழுத்தாக இருந்தது.

இவர் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் தனது வாழ்க்கையில் பெரும்பகுதியை சமய சமூகத் தொண்டுகளுக்காக அர்ப்பணித்தார். சைவ சமய நூல்களைக் கற்றுத்தேறி ஆலயங்களில் புராணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தல், உரைகூறுதல், புராண படனம் செய்தல் என்பவற்றில் ஈடுபட்டார். புராணங்களை விரும்பிக் கற்று அவற்றின் நயங்களை பிறருக்குக் கூறுதலில் இன்பம் கண்டார். மார்கழித் திருவெம்பாவை ஆரம்ப மானதும் இவரை மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் கோயில், மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில்களிற் காணக்கூடியதாக இருக்கும். சமயத் தொண்டு போன்று சமூகத் தொண்டையும் பெரிதும் போற்றிய இவர் சமூக சேவைகளில் தொண்டாற்றினார். மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கச் செயலாளராகவும், அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கக் கிளை 9 இன் தலைவராகவும் ஆறு ஆண்டுகள் சேவையாற்றி மக்களின் நன்மைக்காகப் பெரிதும் உழைத்தார். மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்க நிர்வாக உறுப் பினராக இரண்டு ஆண்டுகள் நற்சேவை புரிந்தார். இத்துடன் அயலில் உள்ள பிள்ளைகளுககு ஆங்கிலம், சைவநெறி என்பவற்றை எதுவித ஊதியமும் இன்றி இலவசமாகச் சொல்லிக் கொடுத்தார்.

எவர் என்னத்தைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லத் தெரியாதவர். இவரில் கோபம் என்பதைக் காண்பது அரிதிலும் அரிதாகும். சுத்தம்நிறைந்த ஆசார சீலராக எந்தநாளும் காட்சியளிக்கும் இவர் தமது உடற் போன்று தமது இல்லம், சுற்றாடல், சூழல் என்பன சுத்தமாக விளங்க வேண்டும் என்று பெருவிருப்புடன் உழைத்த பெரியார் ஆவர். அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போமாக.

15 - 02 - 1995 — ச. வேலாயுதபிள்ளை
மல்லாகம். — இளைப்பாறிய அதிபர்.

# தனக்கென வாழாத பெருந்தகை

பெரியார் தம்பர் சேனாதிராசா மரணித்த செய்தி கேட்டு சொல்லொணாத் துயருற்றேன். அரசாங்கத்தில் லிகிதராக, முதலியாராக, பதிவாளராக நீர்கொழும்பு, மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம் மல்லாகம், சிலாபம் ஆகிய இடங்களில் சேவையாற்றிய காலத்தில் எனது தந்தையாருடன் வந்து உரையாடுவார். சிறுவனாக இருந்த காலந் தொட்டு நானும் அவரின் அன்பிற்குப் பாத்திரமானேன்.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகை. அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தன் ஊரின் முன்னேற்றத்திற்காக வாழ்ந்தவர். மக்களின் கல்வியும் வாழ்க்கையும் முன்னேற வேண்டும் என்பதே அவரின் குறிக்கோளாக இருந்தது.

எனது வீட்டிற்கு வரும் போதும், எனது தந்தையாருடன் கலந்துரையாடும் போதும் என்னை உற்சாகப் படுத்தி, நன்றாகப் படித்து, பட்டம் பெற்று அப்பாவின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். நான் படிப்பை முடித்து, வைத்திய சேவை தொடங்கிய காலத்தில் சேனாதிராசா ஐயா வீட்டிற்கு வந்ததும், முதலில் அவர் எனது கையைப் பிடித்துக் கொஞ்சி, எனது எதிர்காலம் நல்ல படியாக இருக்க வேண்டும் என்று நல்வாழ்த்துக் கூறினார். அவர் நோய் வாய்ப்பட்டு இருந்த காலத்திலும், நான் அவருக்குச் சிகிச்சை செய்த நேரத்திலும் என்னில் வைத்த அன்பு மாறவில்லை. அப்படிப்பட்ட ஒரு பெரிய மனம் படைத்த பெரியாரை நினைக்கும் போது எனது மனம் வேதனைப் படும். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திப் போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மல்லாகம் **டாக்டர் ஆ. சிவபாதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குடும்ப விளக்கு

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ளார்வலர்
புன் கணீர் பூச றரும்"

வள்ளுவப் பெருமானின் இப்பொய்யா மொழிக்கமைய அன்பின் திருவுருவாய், பாசத்தின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய் எங்கள்குடும்ப விளக்காய், எம்மை யெல்லாம் வழி நடத்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தந்தையே! என் அருமை அப்பாவே! உங்களை எப்படி நான் மறப்பேன். இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, உற்றோரையும் மற்றோரையும் மிக நேசித்து இனிதாகப்பேசி, சீரும் சிறப்புடன் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றும் எமது உள்ளத்தில் பசுமையாக இருக்கும். இன்சொல் அல்லாமல் வன்சொல் உங்கள் நாவில் இடம்பெறாதே அப்பா. ஒரு ஈ எறும்புக்குத்தன்னும் மனத்தாலும் தீங்குசெய்ய மாட்டீர்களே, அப்பா.

கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டிற்கு இலக்கணமாய் வாழ்ந்தீர்களே அப்பா. அதனாலன்றோ அத்தனை நீதிபதிகளின் அன்பிற்கும் பாத்திரமாக விளங்கினீர்கள். "My eldest son" என்று என்னைப் பெருமையாக அழைப் பீர்களே அப்பா! இந்த அன்பு மொழியை இனியான் எப்போ கேட்பேன். நான் லண்டன் A/L வகுப்பில் படிக்கும்போது எனக்குத் தமிழ்மொழியை மிக அழகிய நடையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் சொல்லித் தருவீர்களே. அந்தவார்த்தைகள் இன்றும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றனவே. அதை எப்படி நான் மறப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் நிலைமை காரணமாக அல்லவா நாங்கள் உங்களைப்பிரிய நேர்ந்தது. அப்படியிருந்தும் பல இன்னல்களுக்கு மத்தியில் உங்கள் 90ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாட ஓடோடிவந்து சிறப்பாகக் கொண்டாடினோமே. அதுவே இறுதிக்கொண்டாட்டமாக முடிந்தது. வீட்டிற்குப் போகும்போது விடைதாருங்கள், அப்பா என்றால், படுக்கையில் இருந்தபடி பிரிய மனம் இல்லாமல் " The day is still young ", என்று கூறுவீர்களே அப்பா. நாட்டின் நிலமை சீராக உங்களை எங்கள் இல்லத்திற்கு அழைத்துவர இருந்தோம். அதற்குள் கதையை முடித்து விட்டீர்களே, அப்பா. இறுதிப்பயண மும் உங்கள் விருப்பப்படி, உங்கள் பெருமைவாய்ந்த இல்லத்தில் இருந்து இடம் பெறவில்லையே என்பதை நினைத்து மனம் வருந்துகின்றோம். நாம் நினைப்பது போல் ஒன்றும் நடப்பதில்லையே. உங்கள் பிரிவை என்னால் தாங்கமுடியவில்லையே, அப்பா !!

எங்கள் அன்புத்தந்தையின் ஆத்மா சாந்தியடைய பழம்பதி விநாயகர் அருள்புரிவாராக.

**திருமதி சுபத்திராதேவி விவேகானந்தன்**
(மூத்த மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புத் தெய்வம்

எனது அருமை அப்பா! இன்று நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் எங்கள் உள்ளங்களில் நீக்கமற நிறைந்து நிற்கிறீர்கள். ஆறு சகோதரிகளுடன் உங்கள் ஏக புத்திரனாக நான் செல்லப் பிள்ளையாய் வளர்ந்தேன். எங்களுக்குக் கல்வி அறிவை அளித்து அன்பையும் பண்பையும் பாசத்தையும் உணர்வோடு சேர்த்து ஊட்டி வளர்த்தீர்கள் அப்பா. உங்களைப் போன்ற அன்பு மிக்க ஒரு தந்தையை எங்கே காண்போம்.

**'' அன்பும் அறனும் உடைத்து ஆயின்**
**இல்வாழ்க்கை பண்பும் பயனுமது''**

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கிற்கமைய மனையாளிடம் அன்பும் பிறரிடத்தில் பரிவும் காட்டிப் பிறர்க்குப் பகுத்து உண்ணலாகிய அறத்தையும் செய்து வாழ்ந்தீர்கள். இல்லறத்தை நல்லறமாய் நடத்தினீர்கள். முகமலர்ச்சியுடன் விருந்தினரை வரவேற்று உபசரிப்பீர்களே அப்பா. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பீர்களே. உங்கள் விருந்தோம்பலின் சிறப்பை எப்படிக் கூறுவேன்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நிறைந்த அறிவைப் பெற்றீர்கள். ஆங்கில மொழியில் ஆங்கிலேயரே மயங்கும் அளவில் நீதிமன்றத்திலே முதலியாராக, மொழிபெயர்ப்பாளராக, பதிவாளராக சிறந்த சேவையாற்றினீர்கள். கல்வியைச் சீரிய முறையில் கற்று அதன் வழியிலே நின்று ஒழுகினீர்கள். அது மட்டுமா, உங்கள் பிள்ளைகளும் ஆங்கில மொழியில் சிறந்த புலமை அடையச் செய்தீர்கள். பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் அன்போடும் பாசத்தோடும் வளர்த்தீர்கள்.

தங்களின் இறுதிக் காலத்தை எனது வீட்டில் கழித்து இறைவனடி சேர்ந்தீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புள்ள மகன்

**சே. நாகேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பின் உறைவிடம்,
# எங்கள் அப்பா! பாட்டா!

அன்பின் உருவமாய், பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் நேர்மையின் மறு உருவமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே, அப்பா! உங்களை நாங்கள் எப்படி மறப்போம். எங்களைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தீர்களே, இவ்வையகம் உள்ளளவும் உங்கள் புகழ் தரணியெங்கும் நிலைத்தோங்கும்.

**''உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்''**

என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்க நேர்மை, கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றை உங்கள் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வாழ்ந்தீர்கள். சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரையும் அன்புடன் வரவேற்று இன்சொல்பேசி, நல்விருந்தோம்பி இல்லறம் நல்லற மாம்படி வாழ்ந்தீர்களே. ஆயிரம் பிறைகண்ட பெருமகன் நீங்கள். இதயத்தில் இருந்து பாயும் அன்புப்பெருக்கைக் கண்களில் வர்ஷித்துப் பாசத்தை ஊற்றாகப் பொழிந்து எங்களை வளர்த்த எமது அன்புத் தந்தையே, உங்கள் நினைவலைகள் என்றும் எமது நெஞ்சில் நீங்காமல் பதிந்திருக்கும்.

**''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''**

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கிற்கமைய வாழ வேண்டிய முறையில் வாழ்ந்து இறைவன் திருவடியை அடைந்த எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தி யடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**திருமதி ரமணி செல்வராஜா**
(மகள்)
**செல்வன் கஜனன் செல்வராஜா**
(பேரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் ஊற்று

அன்போடும் பண்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து, சீரும் சிறப்புடன் எம்மை வாழவைத்த எங்கள் அன்புத்தந்தையே! எங்கள் அருமை அப்பா! உங்களை நினையாத நாட்கள் இல்லையே. உங்களைப் பிரிந்து, கடல் கடந்து, அன்னிய நாட்டிற்கு வந்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதே. தினமும் ஆவலுடன் உங்கள் கடிதங்களை எதிர்பார்த்த வண்ணம் இருப்போம். சிறீ லங்காவிலிருந்து Call என்றால் எவ்வளவு களிப்புடனும் கட்டுங்கடங்காத ஆர்வத்துடனும் குதூகலத்துடனும் உரையாடுவோம். அன்றும் அதே ஆர்வத்துடன் Receiver ஐ எடுத்தோம். ஆனால், அந்தச் செய்தி! எங்கள் அன்புத்தந்தையின் இறுதிச் செய்தி, அப்பா! எங்களால் அதைத் தாங்கவே முடியவில்லையே!

அம்மாவின் இறுதிக்கருமத்தில் பங்கு பற்றக் கொடுத்து வைக்கவில்லை. அப்பாவை என்றாலும் கூடிய சீக்கிரம் வந்து பார்ப்போம் என்று ஆவலுடன் இருந்தோம். அதற்குள் உங்கள் இறுதிப் பயணத்தைத் தொடங்கி விட்டீர்களே அப்பா. ஒவ்வொரு கடிதத்திலும் அப்பாவைக் கவனமாகப் பார்க்கும்படி எழுதுவோம். அருகிலிருந்து உங்களுக்குக் கடமை செய்யக்கொடுத்து வைக்கவில்லையே. உங்கள் அழகிய வதனத்தை எப்போ காண்போம்.

உங்கள் அன்புப் பேரப்பிள்ளைகள் எழுதிய மழலைக் கடிதம் வந்து சேர முன் பிரிந்துவிட்டீர்களே. அன்புப் பாட்டனைப் படத்தில் தானே பார்த்து மகிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்கள். உங்கள் அன்பு மருமக்கள்தான் இத்துயரை எப்படித் தாங்குவார்கள். இங்கு உங்கள் அன்புச் சகோதரன், பிள்ளைகள்' எல்லோரையும் கலங்க வைத்துவிட்டீர்களே. பெரியப்பா, சித்தப்பா என்று இனி யாரை அழைப்பார்கள். எங்கள் கண்ணீரையே காணிக்கையாக அர்ப்பணிக்கின்றோம், அப்பா. எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவன் அருள் புரிவாராக.

**திருமதி ஜெயந்தி ஸ்ரீஸ்கந்தராஜா**
(கனடா)
**திருமதி வசந்தி நித்தியானந்தன்**
(ஜேர்மனி)
**(மக்கள்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புப் பாட்டா!

பிஞ்சுக் கரம் நோகுமென்று
பஞ்சணை யோ டணைத் தெம்மை
பஞ்சியே பாராமல் பக்குவமாய்க்
கண்வளர்த்த பாட்டாவைக்
காணாது துடித்து நின்று
கண்ணீர் மல்கி
எண்ணத்தில் இடி விழ
ஏங்கித் தவிக்கின்றோம்.

பாட்டாவின் கைத்தடி யெங்கே
பாதரட்சை யெங்கே
பேரப்பிள்ளைகள் நினைவாலே வாடுகின்ற
பேரன்பு எங்கே
நேர்த்தியாய் எழுதுகின்ற நேச
மிகுகடித மெங்கே யெனப்
பார்த்து நாம் வாடுகின்றோம்
அந்நிய தேசத்திலே.

இன்னுஞ் சில நாள் எங்களுடன்
இருக்க வேண்டு மென்று
மன்றாடி இறைவனை வேண்டி
நின்றோம் பாட்டா
அக்கவலை என்றுமே மாறாது
தீராது பாட்டா
ஏனோ மனந்துணிந்தீர் எம்மை
விட்டுப் பிரிவதற்கு.

கல்வியின் முக்கியத்தைக் கருத்தில்
எடுத்துரைப்பீர் நாம்
கல்வியில் உயர்ந்ததும் ஆசிரியப்பணி புரிவது
பல்கலைக்கழகம் புகுந்து சிறந்ததும் உங்கள்
நல்லுப தேசமென்று நாளும்
நினைக்கின்ற வேளையிலே
சொல்லாமல் கொள்ளாமல் விண்ணுலகம்
சென்ற தேனோ.

**அன்புப் பேரப் பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லைநகர்

# தம்பர் சேனாதிராஜா (முதலியார்)

அவர்களின்

# வாழ்க்கைக் குறிப்பு

*பரம்பரை :*

—மனுநாயகமுதலி வழி தனபாலசிங்க முதலிப் பெருங்குடி

*பிறப்பு :*

—12 - 08 - 1904, '' குற்றாலம், '' அளவெட்டி

*ஆரம்பக்கல்வி :*

— அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.

*உயர்கல்வி :*

— பரமேஸ்வராக் கல்லூரி, திருநெல்வேலி

*தராதரம் :*

E. S. L. C.

*தொழில் :*

— நீதிமன்ற எழுதுவினைஞராக, முதலியாராக, பதிவாளராக.

*தொழில் செய்த இடங்கள் :*

1. கொழும்பு ( Labour Department )
2. மல்லாகம் நீதிமன்றம்
3. நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றம்
4. மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம்
5. சிலாபம் மாவட்ட நீதிமன்றம்

*திருமணம் :*

1936ஆம் ஆண்டு மல்லைநகர் கந்தப்பிள்ளை செல்லம் தம்பதிகளின் ஏகபுத்திரி பாக்கிய வதியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறை :

சங்கீதத்தில் ஆர்வம், கூடிய ஈடுபாடுடையவர்.
விளையாட்டுத்துறையில் ஆர்வம்.
Foot ball, Cricket விளையாடுவது. பல மேடை நாடகங்களில் பங்குபற்றியமை (Colombo Dramatic Society)

சமூகசேவை :

பல திருமணங்களைத் தனது இல்லத்தில் நிகழ்த்தி வைத்த பெருமைக்குரியவர்.
மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கச் செயலாளராகவும், தலைவராகவும் கடமை ஆற்றினார்.
மல்லாகம் கிராம முன்னேற்றச்சங்க நிர்வாக உறுப்பினர்.

சமய ஈடுபாடு :

அளவெட்டி குலதெய்வம், குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார், மல்லாகம் பழம் பிள்ளையார், நீலியம்பனைப் பிள்ளையார் கோவில்களில் புராணபடலம், பெருங்கதை, கந்தசஷ்டி, திருவெம்பாவை பாடல்கள் ஓதுதல்.

தலயாத்திரை :

தனியாகப் பல முறையும், குடும்பத்துடன் ஒரு முறையும் இந்தியத் திருத்தல யாத்திரை செய்தமை (இராமேஸ்வரம், மதுரை, சிதம்பரம், சென்னை, குற்றாலம்) இலங்கையில் கதிர்காமம், முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி :

நாட்டு நிலைமை காரணமாக சிறுப்பிட்டியில் தனது மகனது இல்லத்தில் வாழ்ந்து சிவபதம் அடைந்தமை.

## சந்ததி விபரம்

பெற்றோர் :

தம்பர் + சின்னத்தங்கம்

சகோதரர் :

அமரர் த. தியாகராசா (Accountant)
அமரர் த. செல்லம்மா
அமரர் த. நடராசா (Proctor, J. P. U. M.)
திருமதி சு. சிவக்கொழுந்து (Australia)
திரு. த. கந்தையா. (Canada)

மனைவி :

திருமதி சே. பாக்கியவதி

மைத்துனர் :

அமரர் க. தியாகராசா
(ஓய்வுபெற்ற உப - தபால் அதிபர் - மல்லாகம்)

மக்கள் :

திருமதி சுபத்திராதேவி விவேகானந்தன்
(ஆசிரியை யா/இராமநாதன் கல்லூரி)
திரு. சே. நாகேந்திரன் (இலங்கை மின்சாரசபை)
திருமதி இராஜராயேஸ்வரி கந்தசாமி.
திருமதி ரங்கநாயகி நற்குணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ரமணி செல்வராஜா
(முன்னாள் லிகிதர், விற்பனைத்திணைக்களம்
யாழ்ப்பாணம்)

திருமதி ஜெயந்தி ஸ்ரீஸ்கந்தராஜா (Canada)

திருமதி வசந்தி நித்தியானந்தன் (Germany)

மருமக்கள் :

திரு. செ. விவேகானந்தன்
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் விவசாய திணைக்களம்
யாழ்ப்பாணம்)

திருமதி நா. வள்ளிநாயகி

திரு. கு. கந்தசாமி
(ஓய்வு பெற்ற கிராமசேவையாளரும்
விவாகப் பதிவாளரும்)

திரு. மா. நற்குணம் (லண்டன்)

திரு. ச. செல்வராஜா

திரு. த. ஸ்ரீஸ்கந்தராஜா (Canada)

திரு. ந. நித்தியானந்தன் (Germany)

பேரப்பிள்ளைகள்

செல்வன் வி. சுதாகரன்

செல்வி வி. விவேகா
(யாழ். பல்கலைக்கழகம் விஞ்ஞான பீடம்)

செல்வன் ரவிசங்கர் (France)

திருமதி அனுஷியா சந்திரகுமாரன்
(ஆசிரியை மன்னார் புனித சவேரியார்
பெண்கள் பாடசாலை)

செல்வி அகல்யா கந்தசாமி

செல்வன் கு. உமாசங்கர் (Canada)

செல்வன் கு. ஜீவசங்கர் (Canada)

செல்வன் ந. ராகுலன்

செல்வன் ந. கோகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி ந. மாதங்கி
செல்வன் செ. கஜனன்
செல்வன் ஸ்ரீ. மயூரன்
செல்வன் ஸ்ரீ. ஆருரன் } (Canada)
செல்வன் நி. செந்தூரன்
செல்வன் நி. நிதர்சன்
செல்வி நி. நித்தியா } (Germany)

பூட்டப் பிள்ளைகள் :
செல்வன் ர. ஜெனோர்த்தனன்
செல்வி ர. அலிஷந் } (France)
செல்வன் ச. கோபிசந்தர்
செல்வி ச. விபூஷா

வளர்ப்புப்பிள்ளை :
செல்வி சு. சீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி .........

★ எமது அன்புத் தந்தையின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள்.

★ அஞ்சலி செய்தோர், அஞ்சலிக் கட்டுரைகள் வழங்கினோர், அநுதாபம் தெரிவித்தோர்.

★ எமது மதிப்பிற்குரிய அம்மையார், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

★ கண்ணீர் அஞ்சலி செலுத்தி அநுதாபம் தெரிவித்த யா/இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

★ அந்தியேட்டிக் கிரியை, ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்துகொண்ட அன்பர்கள்.

★ இம்மலரை வெளியிட உதவிய மதிப்பிற்குரிய பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்கள்.

★ இம் மலரைச சிறப்புற அச்சிட்டு வெளியிட்ட சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர்

அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றி.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்,
03-03-1995

**அன்புப் பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org